சங்கமம்
SANGAMAM

" அகர முதல எழுத்தெல்லாம் – ஆதி பகவன் முதற்றே யுலகு "

கூட்டுறவுக் குரல் Voice of Co-op

ஆறு 06 திருவள்ளுவர் ஆண்டு 2032 டிசெம்பர் / மார்கழி அருவி – 04


## வன்னி வாழ் மக்களின்
# அருந்தல்களை நீக்கும் மருந்தாக பொருளாதார தடை நீக்கம் அமையுமா?

### உதட்டில் அல்ல உள்ளத்தில் சமாதானம் உருவாக வேண்டும்!

அநாகரிமான அரசியல் நடவடிக்கைகளை வெறுத்தொதுக்கி ஒரு புதிய அரசியல் கலாச்சாரத்தை தோற்றுவிக்க நாட்டின் பெரும்பான்மையான மக்கள் உறுதி பூண்டுள்ள வேளையிலும் சமாதானமும், சௌஜன்னியமும் முக்கிய எடுகோலாகப் பேசப்பட்டாலும் சமாதானத்திற்கான இயல்புநிலையைதோற்றுவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

வன்னிப்பெருநிலப்பரப்பிலும் மற்றும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் வாழுகின்ற மக்கள் தொடர்ந்தும் பொருளாதார அழுத்தங்களின் மத்தியிலும், இராணுவக் கெடுபிடிகள் மத்தியிலுமேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

உணவுப் பொருட்கள் எடுத்துச்செல்வதில் கட்டுப்பாடுகள் சீரான மருத்துவ வசதிகள் கிடைக்காமை, போக்குவரத்து சீர்கேடு, எரிபொருள், விவசாய உள்ளீடுகள் கிடைக்காமை போன்ற பல்வேறு அடிப்படை உரிமைகள் இப்போதும் மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளன இது சமாதானத்தை எதிர்பார்த்த மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை கொடுத்துள்ளது.

பேச்சுவார்த்தைக்கான இயல்பு நிலை உருவாக்கப்பட வேண்டுமானால் முதலில் அனைத்து தடைகளும் உடன் நீக்கப்பட்டிருக்க வேண்டும். மாறாக உதட்டளவில் சமாதானம் சமாதானம்... என்று பேசுவதில் எத்தகைய அர்த்தமும் ஏற்படப்போவதில்லை சமாதானம்என்பது உள்ளத்தில் இருந்து உருவாகி உருப்படியான தோற்றத்தை தோற்றுவிக்க வேண்டுமாயின் மக்கள் மத்தியில் நம்பிக்கையூட்ட வேண்டுமாயின் தடை என்ற பேச்சுக்கே இடமிருக்கக் கூடாது இதையே மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். விரைவில் சமாதான சூழலை உருவாக்கி தடையற்ற பொருளாதார நிலையை அரசு உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

— சூசி



ஒரு நாடு நல்ல சட்டங்களினால் ஆளப்படுவதைவிட நல்லவன் ஒருவனால் ஆளப்படுவதையே நான் விரும்புகிறேன்:

— அரிஸ்டார்டில்

## கூட்டு.சங்கங்களின் செயல்திறன் மதிப்பீடும்! அபிவிருத்தி பற்றிய செயலமர்வும்!

கிளிநொச்சி மன்னார் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் 2001ஆம் ஆண்டுக்கான மதிப்பீடும், 2002ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி பற்றிய சிறப்பு செயலமர்வை தமிழீழ நிர்வாக சேவை ஜெயபுரத்திலும் கிளிநொச்சியிலும் நடாத்தியது.

கிளிமாவட்டத்தின் கரைச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கூட்டுறவுக் சங்கங்கள் பங்குபற்றிய செயலமர்வு டிசம்பர் 28ம் நாள் கிளிநொச்சி தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் க. முரளி அவர்கள் தலைமையில் அதன் அலுவலகத்தில் நடைபெற்றது.

அதேபோன்று இராணுவக் கட்டுப்பாடற்ற மன்னார் மாவட்டத்தின் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கிளி பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் பங்குபற்றிய செயலமர்வு மன்னார்-பூநகரி தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் சி. இசையமுதன் அவர்கள் தலைமையில் அதன் அலுவலகத்தில் டிசம்பர் 30-ம் நாள் நடைபெற்றது.

இச் சிறப்பு செயலமர்வில் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் சம்பந்தப்பட்ட கூட்டுறவுப் பகுதி இணைப்பாளர்கள் உத்தியோகத்தர்கள் பங்குபற்றி வழிநடத்தினர்.

இவ் அமர்வில் கடந்த ஆண்டுக்கான செயல்திட்ட மதிப்பீடு, அடுத்த ஆண்டு அபிவிருத்தி என்பன ஆராயப்பட்டது அதன் போது பங்கு பற்றியவர்களால் ஆக்க பூர்வமான ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டது.



இருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டனர்: மரண நிழல்படும் நாட்டில்உள்ளோர்க்கு ஒளி உதித்துச் சுடர் வீசிற்று.

(இசையாஸ் 9:2)

அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது உளம் கனிந்த கிறிஸ்மஸ் புதுவருட வாழ்த்துக்கள்.

— சங்கமம்

## எல்லைக் காப்புப்படை மாவீரர் நினைவு

மாவீரர் நாளை முன்னிட்டு கிளி ஊர்காவற்றுறைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது எல்லைக்காப்புப்படை மாவீரரான லெப். சி. அன்னராசா அவர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி நிகழ்வினை மேற் கொண்டு அவரது குடும்பத்தினரைக் கௌரவித்தனர்.

இந்நிகழ்வு மேற்படி சங்க தலைமை அலுவலகத்தில் தலைவர் தி: சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

தமிழீழ எல்லைக்காப்புப் படை பொறுப்பாளர் கி பாப்பா அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்,

கிளி ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர் தொழிற்சங்கத்தினர் பத்தாயிரம் ரூபா நிதியை வங்கியில் வைப்பிலிட்டு சேமிப்புகையேட்டினை மாவீரர் லெப். சி, அன்னரசாவின் சகோதரியிடம் வழங்கினர். மற்றும் மேற்படி சங்கம் மாதாந்த கொடுப்பனவையும் வழங்கி வருகிறது என குறிப்பிடதக்கதாகும்.

இந்நிகழ்வில் கிளி மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் கிளி தமிழீழ நிர்வாக சேவைப்பிரதிநிதிகள் பங்கு பற்றி நிகழ்வை சிறப்பித்தனர்.

## கிளிநொச்சி மாவட்ட கூட்டு. சங். தேவைகள் பற்றி ஆராய்வு

பொருளாதார தடை நீக்கப்பட்டால் எதிர் கொள்ள வேண்டிய வழிவகைகள் குறித்தும் கொண்டுவர வேண்டிய நுகர்ச்சிப் பொருட்களின் அளவு அழிக்கப்பட்ட சொத்துக்களை மீள புனரமைக்க எடுத்துவர வேண்டிய பொருட்கள், உபகரணங்கள் என்பவற்றின்அளவுகுறித்தும் மேற்கொள்ளவேண்டியபணிகள்பற்றி ஆராய்வதற்கான சிறப்புக் கூட்டம் டிசம்பர் 26 அன்று நண்பகல் 1 மணியளவில் கிளிமாவட்ட கூட்டுறவுத் திணைக்களத்தில் கிளி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் த. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

கிளிமாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் பொது முகாமையாளர்கள் கிளி கூட்டுறவுப் பகுதி இணைப்பாளர் க. மயூரன் ஆகியோர் பங்குபற்றி கருத்து பரிமாற்றம் செய்து செயற்திட்டத்தை வகுத்தனர்.

தொடக்ககால கூட்டுறவு 05

# விவசாய விற்பனை உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள், ப. நோ. கூ. ச. இணைக்கப்பட்டது

கூட்டுறவு இயக்கத்தின் பணி மறுசீரமைப்புக்குள்ளானமையினால் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக நாட்டின் பொருளாதார முறையில் சேவையாற்ற முடியாது சிற்றூர் மட்டத்தில் செயல் முறைக் கூறுகளான அமைப்புக்களை வலிமை உள்ள அமைப்புக்களாக பொருளாதாரத்தில் ஒப்பேறக் கூடிய தன்மையான அமைப்புக்களாக மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது ஆகையினால் 1970 ஆம் ஆண்டு ஆட்சிப்பீடத்தில் அமர்ந்த ஐக்கிய முன்னணி அரசாங்கம் கூட்டுறவு இயக்கத்தின் மறுசீரமைப்பை உருவாக்கியது ஒரு குறிப்பிட்டபகுதியில் உள்ள சகல கூட்டுறவு சங்க்ங்கள், விவசாய உற்பத்தி விற்பனை சங்கங்கள் ஒரு வட்டாரத்தில் செயற்படுவதற்காக ஒரு பதிவு செய்யப்பட்ட ஒரு புதிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துடன் இணைக்கப்பட்டது (1971) இணைக்கப்பட்ட சங்கங்களின் பதிவு அழிக்கப்பட்டது அவைகளுடைய சொத்துக்களும் பொறுப்புக்களும் புதிய சங்கத்தினால் பொறுப்பேற்கப் பட்டது.

கூட்டுறவுக் கொள்கைகளுக்கு அமைய உறுப்பினர்களுக்காக பொருளாதார சமூக கலாச்சார நலனுக்கு ஊக்கமளித்தலும் உறுப்பினர்களிற்கிடையிற் சிக்கனம், தன்னுதவி ஊக்குவித்தலும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் அடிப்படை நோக்கமாகும் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின்கட்டமைப்பு தொழிற்பரப்பு, உறுப்பினர், கிளைப்பொதுச்சபை, கிளைக்குழு, பொதுச்சபை, பணிப்பாளர்சபை, தலைவர், பணியாளர்கள் என வகைப்படுத்திப்பார்க்கலாம்.

### கிராமிய வங்கி

ஒவ்வொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் மக்கள் வங்கியின் உதவியுடன் ஒவ்வொரு கிராமிய வங்கியை நிறுவியுள்ளது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைப் போன்று மட்டுப்படுத்தப்பட்ட பனை - தென்னை வள கூட்டுறவுச் சங்கம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் போன்ற தொழில்சார் சங்கங்களும் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

கா கார்த்திகேசு

# மனித வாழ்வின் நம்பகத்தன்மை உச்சக்கட்டத்தை எட்டிய நிலையில் சட்டங்கள் தேவைப்பட்டன

மனித நம்பகத்தன்மை உச்சக்கட்டத்தை எட்டிய நிலையில் சட்டங்கள் தேவைப்பட்டன.

மனித வாழ்வின் உயர்ந்த கொள்கைகள் மலினப்படுத்தப்பட்டு ஒருவருக்கொருவர் அவநம்பிக்கை கொண்டதனால் சட்டங்களை மக்கள் வலிந்து ஏற்றுக்கொள்ளும் தேவை ஏற்பட்டது மனித வளர்ச்சியின் குறைபாடு தான் இது

ஜனநாயகம், பொதுவுடமை, சர்வாதிகாரம் இவற்றில் எதைப்பேண விரும்பினாலும் அந்நாடுகள் சட்டத்தின் துணையின்றி ஆள முடியாது.

ஒவ்வொரு நாடுகளின் அதிகாரச் சின்னமாகவும், இறைமையை வெளிப்படுத்தும் சின்னமாகவும் சட்டங்கள் திகழ்கின்றன.

சட்டங்கள் இறைமையின் உச்ச நிலையில் இருந்து உருவானால்தான் அவை உயர் வலிமை மிக்க அதிகாரத் தன்மை கொண்டவையாகவும் சமூக மேம்பாட்டுக்கு உறுதுணையாக உள்ளதாகவும் இருப்பதை உறுதிசெய்து கொள்ள முடியும்.

இலங்கையைப் போன்ற ஜனநாயக அமைப்புள்ள நாடுகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கூடும் பாராளுமன்றத்தில் கருத்துருவாக்கப்பட்டு சட்டங்கள் இயற்றப்படுகின்றன இவையே நாட்டின் உயர் சட்டங்களாகவும் அதிகாரத் தத்துவம் மிக்கவையாகவும் விளங்குகின்றன தனிமனித சுதந்திரத்த்ற்கு இச்சட்டங்கள் ஏற்புடையதாக விருக்கின்றனவா? என்பது கேள்விக்குரிய தாகும்.

நாம் இப்போது கூட்டுறவுச் சட்டங்கள் தொடர்பாக கவனம் செலுத்துவோம்,

கூட்டுறவுத்துறை மிக அபிரிதமாக வளர்ச்சியடைந்த நியூசிலாந்திலும் டென்மார்க்கிலும் கூட்டுறவுச் சங்கங்களுக்கென விசேட சட்டம் எதுவுமில்லை, ஆயினும் இவ்விரு நாடுகளிலும் கூட்டுறவு இயக்கம் தொடர்ந்து மேம்பட்டு வருகிறது.

[ — கவி ]

டென்மார்க்கில் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டங்களால் உருவாக்கப் படவில்லை கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே அல்லது அங்கத்தவர்களுக்கிடையே ஏதாவது பிணக்குகள் தோன்றினால் அவை வழக்கமாகச் சட்ட முறைப்படி அமையாத நடுவர் தீர்ப்புக்கே விடப்படுகின்றன மிக அருமையாக இத்தகைய பிணக்குகள் நீதிமன்றங்களுக்குச் செல்வதுமுண்டு அவற்றிற்கு வழங்கப்படும் தீர்ப்புக்கள் தீர்ப்பு வழிச் சட்டத் தொகுப்பில் இடம்பெறும்

நியூசிலாந்தில் கூட்டுறவுச் சங்கங்கள் கம்பனிச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன, நெதர்லாந்து, பிரான்சு, ஸ்பெயின், சுவீடன் போன்ற நாடுகளது அண்மைக் காலம்வரை அம் முறையையே பின்பற்றி வருகின்றன.

சட்டத்திற்கப்பால் நின்றும் நீதி, அறம், ஒழுங்கு, சமத்துவம் கட்டுப்பாடு போன்ற உயர்ந்த கோட்பாடுகளை கூட்டுறவால் பேணிப்பாதுகாக்கமுடியும்

—தொடரும்

# கவிதை வெளி

## அந்த நாள் வேண்டும்

எம் தேசம்
எம் ஊரும் வீடும்
எம் முந்தையர் வாழ்ந்த பூமி
எமக்காக அவர்
சேர்த்துவைத்த சொத்து
அனுபவிக்க மட்டும் இன்றேன் தடை
கட்டெறும்பு கடித்திடும்
சிறு துரும்பு வலி கூடவின்றியே
வாழ்வை நாம் சுவைத்த
நாளொன்று முன்பிருந்தது.
காலார நடைபயின்று
காசின்றி வீசும் காற்று வாங்கவும்
துட்டு கேட்காத
மனிதங்கள் நடுவே
நாமன்று வாழ்ந்தோம்
நாட்டிய மிடவும்
நாலு பேருடன் கூடிக்குலாவவும்
தடுப்பார் தடைபோடுவார்
யாருமற்ற அந்த நாட்கள்
மீண்டுமெமக்கு வேண்டும்,
வந்தார் போனார் - என்றிடும்
பேச்சு வாக்கு மறைந்து போகட்டும்
வாழ்ந்தார்கள்
வரலாறாகிப் போனார்களென்ற
பொறித்து வைத்த புகழ்
எமக்கானதாகட்டும்
புலியாகி புதிய வரலாறு
படைப்போம்.

— உயிரவன்

* ★ ★

## மரணத்துள் வாழ்வோம்

மரணம்
உயிர் உள்ள இனமெல்லாம்
போய் விடுமோ வென்றஞ்சும்
ஓர் சடவாயு
வரலாறு படைத்திடவும்
மனிதர்களின் மனக்கண்முன்தோன்றி
உறுத்தி நிற்கும் ஓர் சக்தி
மானமுள்ள தோழா
மனித வாழ்விற்கு வயது
கொஞ்சக் காலந்தான்
வரலாற்றுக்கு வயது
வானம், பூமி வாழும் வரைக்கும்,
மரணத்திற்குப் பயந்து தமிழன்
ஒருபோதும் மரணத்தின் முன்
மண்டிடான்
மரணத்துள் வாழ்பவர்கள் நாம்
நாள் குறித்து
விலாசம் சொல்லி
மரணத்தை மகிழ்வுடன் வரவேற்று
வரலாறு எழுகின்ற மனிதங்கள்
வாழுகின்ற பூமி இது
மரணிக்கும் போதில் தான்
எமக்கானது எம்மிடம் என்றால்
அந்த மரண தூதுவனையே
நாம் மானசீகமாய் வரவேற்போம்
மரணத்தின் மான்பு
எமக்குத் தெரியும்
ஏனெனில்
நாம் மரணித்தும் வாழ்பவர்கள்

— அன்ரனி

## ஒவ்வொரு அஸ்த்தமனத்திலும்

சூரிய அஸ்த்தமனத்தில்தான்
சந்திர உதயம்
மலர்களின் அஸ்த்தமனத்தில்தான்
காய்களின் உதயம்
விதைகளின் அஸ்த்தமனத்தில்தான்
மரங்களின் உதயம்
சில மனிதர்களில்
அஸ்த்தமனத்தில் தான்
பெருமைகளதும்
சாதனைகளதும் உதயம்
முயற்சிகளின் அஸ்த்தமனத்தில்தான்
திருவினையாக்கலின் உதயம்
கொடுமைகளின்
அஸ்த்தமனத்தில்தான்
நின்மதியின் உதயம்
போரின் அஸ்த்தமனத்தில்தான்
சமாதானம் உதயம்
ஒவ்வொரு அஸ்த்தமனங்களும்
உதயங்களுக்காகவே

செல்வி காயத்திரி இராமசாமி

## சிந்திக்குமா பேரினவாதம்

மலக்குழியில் மனித எலும்புகள்
மக்கள் தினசரியின் செய்திகள்
மலக்குழியோடு விட்டானா எதிரி
கிணற்றிலும் பதுங்கு குழியிலும்
புகுந்த படையால் — குதறி
பூசிக்கப்பட்ட மனித எச்சங்கள்
அரச வல்லூறுகளினால் — இங்கு
அரங்கேறிய கொலை
வெளிச்சான்றுகள்
மனதை விட்டு அகலாத -என்றும்
மறக்காத மரணங்கள்
சில தினமும் பார்க்கின்றோம் ???
செல்தாக்குதலில் சிதறியவரும்
குண்டு வீச்சில் மாண்டவரும்
அகதி என்ற அவஸ்தையில்
அனாதையாகி அவலப்பட்டோரும்
அரசின் அரக்க கோரத்தால்
அடியோடு இல்லாமல் போயினர்
இவர்களின் இறப்புகள்
என்றும் சான்று கூறும்
இடப் பெயர்வின் பின்-தமிழ்
இன அழிப்புகள் இவை !!!
சிந்திக்குமா சீறிக்கொண்டிருக்கும்
சிந்தனையற்ற பேரினவாதம்

—முரசுநகர் துஷி

## புலியெனத் தங்கையும்

கதிரவனைக் கண்டதும்
பனியுருகிப் போகுமாற் போல்
பயந்தொதுங்கி
ஓட்டுக்குள் சுருண்டு போகும்
அட்டையாகிப் போவதேன்?
ஆசைத் தங்காய்
பலவீனமான உள்ளமதில் - பகை
அச்சவுணர்வினையே தோற்றுவிக்கும்
வரலாற்றுப் பதிவின் பக்கங்களில்
பதிந்திருக்கும் உன்
தாயவளின் பாதச்சுவட்டில்
இரகசியத்தைத் தேடிப்பார்
வீரமும் தியாகமும்
கடின உழைப்புமே கண்டு கொள்வாய்
துயர் வாழ்வையுனக்கு பகைவர்
முள் முடியாய் ஆட்டுவர்
துவண்டு விடாதே
துன்பத்தை நாளும்
போர்வையாக்குவர்
துவண்டு விடாதே
நீதியின் கதிரவன் எம் தலைவன்
நீ இனி அஞ்சத் தேவையில்லை
இருள்திரை போர்த்திருக்கும்
உன் கண்கள் இனி
முகில்களை ஊடுருவிச் செல்லும்-வீர
ஒளிக்கீற்றுக்களைப் பிரசவிக்கட்டும்
அவ் வீர வெளிச்சத்தில்
எத்தர்கள் எரிந்துருகிப் போகட்டும்
என் தங்கையும் புலியென்று
என் கண்களும் கண்டு மகிழட்டும்

அ. பி. குணா

♣ ♣ ♣

## சமாதானப் புறா

சமாதானப் புறா
பறந்து வருகிறது - வரும்
சிங்களப் பேரினவாதம்
விழுங்கி விடுமோ ? என்று
என்னுள் எழுகின்ற அச்சம்
இதயத்தைப் பிளக்கிறது
பிறக்குமா புதுயுகம்
எங்கள் தாயகம் விடியுமா ?

—அங்கவி

# கூட்டுறவு ஊழியர் ஒழுக்காற்று நடைமுறைகள் (2)

தொகுப்பு :-
சூசி

2:7 அத்தகைய நிகழ்வொன்று தொடர்பான பதிவொன்றை மேற்கொள்தல் அவசியமானதெனக் கருதுமிடத்து நிகழ்வைச் சுருக்கமாகப்பதிவு செய்து அது தொடர்பான தவறைப் புரிந்து ஊழியரின் கையொப்பத்தையும் பெற்று அவருடைய சுயவிபரக் கோவையில் உள்ளடக்குதல் வேண்டும் சம்பந்தப்பட்ட ஊழியர் அதைக் கையொப்பமிடமறுத்தால் நிகழ்வு தொடர்பான தொடக்க ஆய்வொன்றினை மேற்கொண்டு முறையான விசாரணை ஒன்றை நடாத்துதல் பற்றிய தீர்மானம் ஒன்றை எடுக்கலாம்.

2:8 சம்பந்தப்பட்ட ஊழியர் சங்கத்தின் பொது முகாமையாளராக இருக்குமிடத்து சங்கத்தின் தலைவரினாலோ அல்லது இயக்குனர் சபையினாலோ பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் இத்தகைய ஆரம்ப விசாரணை நடாத்துதல் வேண்டும் ஏனயை ஊழியர் விடயத்தில் பொதுமுகாமையாளரினாலோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவரினாலோ அதை மேற்க் கொள்ளல் வேண்டும். தலைவரினாலோ அல்லது இயக்குனர் சபையினாலோ பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் இத்தகைய தொடக்க ஆய்வினை நடாத்துதல் வேண்டும் ஏனைய ஊழியர் விடயத்தில் பொதுமுகாமையாளரினாலோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப் பட்ட நிறைவேற்று உத்தியோகஸ்தர் ஒருவரினாலோ அதை மேற்க்கொள்ளல் வேண்டும்.

### 3) ஆரம்ப விசாரணை

3:1 ஏதேனுமொரு தவறொன்றைப் புரிந்துள்ளாரென சந்தேகிக்கப்படும் ஊழியர் ஒருவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியுமா என ஆராய்வதற்கு அவசியமான சான்றுகளையோ அல்லது ஏனைய நிகழ்வுகளையோ திரட்டுவதற்காகத் தொடக்க ஆய்வொன்று நடத்தப்படல் வேண்டும்.

3:2 ஆரம்ப விசாரணையை மிகவிரைவில் நடாத்துதலும் சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் பொருட்களையும் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுதலும் சங்கத்தினால் மேற்க்கொள்ளப்படல் வேண்டும்.

3:3 இத்தகைய ஆரம்ப விசாரணை நடாத்துவதற்காகச் சங்கத்தின் பொதுமுகாமையினரினால் அதற்கான தகவுடைய நிறைவேற்று மட்டத்திலுள்ள உத்தியோகஸ்த்தர் ஒருவரை நியமித்தல் வேண்டும் அவ்வாறு நியமிக்கப்படும் உத்தியோகஸ்தரின் சேவை முதுமுறை இத்தகைய விசாரணையையோ அல்லது இறுதி விசாரணையையோ எவ்விதத்திலும் பாதிக்கலாகாது.

3:4 குறிப்பாக ஒரு வாரத்தினுள் ஆய்வினைப் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

3:5 ஆரம்ப விசாரணையின் போது சந்தேகிக்கப்படும் ஊழியர் சார்பாக வேறு எவரும் தோற்றுவற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

3:6 நிகழ்வு தொடர்பாக சம்பந்தப்பட்ட சாட்சியாளர்களின் கூற்றுக்களைப் பதிவு செய்தல், ஆவணங்களைத்தேடிக் கொள்ளல், பரிசோதனைகளை மேற்க்கொள்ளல் போன்ற பணிகள் இங்கு செய்யப்படல் வேண்டும் சம்பந்தப்பட்ட ஊழியரின் பொறுப்பிலுள்ள பொருட்களினதும், ஆவணங்களினதும் சரிபார்த்தலின் போது அவர் அதற்காகத் தோற்றுவதற்கு உரித்துடையவராவார் அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் பொருட்கள், ஆவணங்கள் ஆகியவற்றை பொறியிடும் போது இயலுமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய கையொப்பத்தையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

3;7 ஆரம்ப விசாரணையின் போது எவரேனும் ஒருவரின் கூற்றொன்று பதிவு செய்வது அவசியமெனக் காணப்படுமிடத்து அதைச் செய்வதற்கு மறுத்தலாகாது.

3:8 அவ்வாறே ஐயுறவு கொள்ளப்படும் ஊழியர்சார்த்துரைக்குக் குற்றவாளியெனக் கூறினால். அதுபற்றிக்கருத்தில் கொள்ளாது தொடக்க ஆய்வினைப் பூர்த்தி செய்து அறிக்கையை ஆய்வினை மேற்க்கொள்ளும் உத்தியோகத்தர் சமர்பித்தல் வேண்டும்.

3:9 மேலும் சந்தேகிக்கப்படும் ஊழியரினதும் அவரினால் தனது குற்றப் பொறுப்பு விடுவிப்புக்காக பெயர் குறித்துரைக்கப்படும், வேறு சாட்சிகளினதும் கூற்றுக்களையும் தொடக்க ஆய்வொன்றின் போது பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

3:10 சந்தேகிக்கப்படும் ஊழியருக்கெதிராகக் குற்றம் சார்த்தப்படக் கூடிய நிகழ்வுகளை ஆராய்தலும் அவர் நிரபராதி என்பதை நிலைநாட்டும் / இலகுவாக்கும்/ கணிக்கும் நிகழ்வுகலை அவதானித்தலும், அறிக்கை செலுத்தலும் தொடக்க ஆய்வொன்றின் போது மேற்க்கொள்ளப்பட வேண்டியவைகளாகும்

(தொடரும்)

---

**தொடர்ச்சி 3**

# முகாமைக் கணக்கிடு

## (Management Accounting) — (வர்த்தகப்பிரிவு உயர்தரத்திற்குரியது)

### முகாமைக் கணக்கீட்டுக்கும் நிதிக்கணக்கீட்டுக்கும் இடையிலான தொடர்புகள்

நிதிக்கணக்கீடானது நிதி அறிக்கைப் பதிவுகள், முடிவுக்கணக்குகளைத் தயார்செய்தல் வியாபாரக் கடன்பட்டோர், வியாபாரக் கடன் கொடுத்தோருடனான தொடர்புகொள்ளல், வரி நடவடிக்கைகளுடன் தொடர்புபடல், முகாமை நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் என்பவற்றால் விருத்தியடைந்துள்ளது.

முகாமைக் கணக்கீடு போன்று நிதிக்கணக்கீடும் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனக் கணக்கீட்டுத் தகவல்களின் தொகுப்பாகும்,

இருப்பினும் நிதிக்கணக்கினூடாக வழங்கப்படும் தகவல்களினை மிக விளக்கமாகச் சமர்ப்பிப்பது முகாமைக் கணக்கீட்டின் மூலமேயாகும் இதனால்தான் முகாமைக் கணககீட்டில் ஓர் வித்தியாசமான தாக்கத்தினை நிதிக் கணக்கிடு கொண்டுள்ளது

### முகாமைக் கணக்கீட்டின் தேவைப்பாடுகள்
### (Emergence of Management Accounting)

முகாமையின் பயன்பாட்டிற்குத் தேவையான தகவல்களை வழங்குதல் விமர்சனம் செய்தல் போன்றவற்றை நிறைவுசெய்து கொள்ளககூடிய வகையில் தகவல்களை வழங்கும் ஒரு செயற்பாடாக முகாமைக் கணக்கீடு காணப்படுகிறது, இக்கணக்கீட்டின் தேவைப்பாடுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

(1) நிறுவனத்தின் நீண்டகாலக் கொள்கையை அமுல்படுத்த
(2) பல்வேறு செயற்பாடுகளின் பெறுபேறுகளை மதிப்பீடு செய்ய
(3) நிறுவனத்தின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த
(4) வேறுபாடுகளிடையே தெரிவு செய்து தேவையான தீர்மானங்களை மேற்கொள்ள
(5) நிறுவனத்தின் குறுங்கால இடைக்கால நீண்டகாலச் செயற்பாடுகளைத் திட்டமிட

### நிதிக் கணக்கிட்டிற்கும் முகாமைக் கணக்கீட்டிற்கும் இடையிலான வேறுபாடுகள்

| நிதிக்கணக்கீடு | முகாமைக்கணக்கீடு |
|---|---|
| 1) நிறுவனத்தின் வெளிக்கட்சியினருக்கு வேண்டிய தகவல்களை வழங்கும். | 1) நிறுவனத்தின் உள்ளகக்கட்சியினருக்கு வேண்டிய தகவல்களை வழங்கும். |
| 2) நிறுவனத்தின் இறந்தகால தகவல்களை உள்ளடக்கும். | 5) எதிர்காலம் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொண்டு திட்டமிடலுக்கு உதவுதல். |
| 3) சட்டத்தேவைகளுக்கு அவசியமாக இருப்பதுடன் கணக்கீட்டு கோட்பாடுகள் நியமங்கள் (Sri-Lanka Accounting Standed) என்பவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். | 3) முகாமையின் தேவைகருதி செயற்பாடுகளை அறிய முடியும் இது சட்டத்தின் கட்டாயத்தேவை அல்ல |
| 4) பொதுவாக ஓர் ஆண்டுக்காகத் தயாரிக்கப்படும் சிலவேளைகளில் அரை ஆண்டு காலாண்டில் தயாரிக்கப்படும். | 4) எதிர்கால அடிப்படைக்காகக் எதிர்கால அடிப்படைக்ககாகத் தயாரிக்கப்படும். |
| 5) நிறுவனத்தின் மொத்த அலகாகக் கருதி செயற்பாட்டுப் பெறுபேறுகளையும் நிதி நிலமைகளையும் சுருக்கி வழங்கும். | 5) வெறுபட்ட பகுதிகள் வேறுபட்ட செயற்பாடுகள் என்ற வகையில் பொதுவாகத் தயாரிக்கப்படும். |

### கிரயக்கணக்கீட்டிற்கும் முகாமைக்கணக்கீட்டிற்கும் இடையிலான வேறுபாடுகள்

1) கிரயக்கணக்கீட்டை விட முகாமைக்கணக்கீடானது 'விடயப்பரப்புக்கள் அதிகமாக காணப்படும்.
2) கிரயக்கணக்கீடு கிரயம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கும். ஆனால் முகாமைக்கணக்கீடானது கிரயம், வருமானம் எனற விடயங்களையும் உள்ளடக்கும்

### முகாமைக்கணக்கீட்டுடன் தொடர்புடைய அம்சங்கள்

முகாமைக் கணக்கீட்டின் பிரதான குறிக்கோள் திட்டமிடலையும் கட்டுப்படுத்தலையும் மேற் கொள்வதற்காக தொகை ரீதியான,. பெறுமதி ரீதியான தகவல்களை முகாமைக்கு வழங்குவதாகும்.

இந்நோக்கத்திற்காக கணக்கீட்டு மூலங்களில் இருந்தும் கணக்கீடற்ற மூலங்களிலிருந்தும் தகவல்களைப் பெறுகின்றது, இதனால் நோக்கம் பரந்ததாகும் முகாமைக்கணக்கீட்டின் அம்சங்களாக

**1. நிதிக்கணக்கீடு**

முகாமைக் கணக்கீட்டின் முக்கிய பணி தரவுகளை மீள ஒழுங்குபடுத்தலாகும் இச் செயற்பாட்டிற்கான அடிப்படையினை நிதிக் கணக்கீடு வழங்குகின்றது. இதனால் நிதிக்கணக்கீட்டின் சிறந்த வரையப்பட்ட நிதிக்கணக்கீட்டு முறை இல்லாவிடில் முழுக்கட்டுப்பாட்டினையோ அல்லது ஒருங்கிணைப்பையோ முகாமைக்கணக்கீட்டால் பெற்றுக்கொள்ளமுடியாது,

**2, கிரயக்கணக்கிடு**

திட்டமிடல், தீர்மானம் எடுத்தல், கட்டுப்படுத்தல், ஒழுங்குபடுத்தல். என்பன முகாமையில் அடிப்படைத் தொழிற்பாடாகும்: கிரயக்கணக்கீட்டு முறையானது நியமக்கிரயவியல், வரவு செலவுக் கட்டுப்பாடு இருப்புக்கட்டுப்பாடு, முகாமைக்கிரயவியல் போன்ற தேவையான கருவிகளை வழங்குகின்றது, இதனால் வினைத்திறமையுடன் முகாமைத் தொழிற்பாட்டினை மேற்கொள்ள முடிகிறது,

**3. மீள் மதிப்பீட்டுக்கணக்கு**

மூலதனமானது உண்மையான கருத்தில் பராமரிக்கப்படுகின்றதா என்றும் அவ்வடிப்படையிலேயே இலாபம் கணிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும் உறுதிப்படுத்துவதில் மீள் மதிப்பீடு அல்லது மீளப்பதிலீட்டுக் கணக்கு அககறை கொள்ளுகின்றது.

— ஆக்கம்: T. பொஸ்கோ
கிளி / மட்டுவில்நாடு அ. த. க. பாடசாலை
முக்கொம்பன், பூநகரி

(தொடரும்)

# கனிஷ்ட பிரிவு மாணவர்களின் கூட்டுறவுப் பயிற்சி நெறி

கிளிமாவட்ட கூட்டுறவுக் கல்லூரியின் கனிஷ்ட மாணவர்களின் கூட்டுறவு தராதரப் பயிற்சியின் நிறைவு விழா 1-12-2001 கிளிமாவட்ட கூட்டுறவுச்சபை கேட்போர் கூடத்தில் கனிஷ்டபிரிவு மாணவ மன்றத் தலைவர் திரு. த. முரளிதரன் தலைமையில் நடைபெற்றது, நிகழ்வின் மங்கல விளக்கை கூட்டுறவுத் தலைமைப் பரிசோதகர் திரு. அ. சபாரத்தினம் கிளி / அளவெட்டி மல்லாகம் ப.நோ. கூ. சங்கத் தலைவர் திரு. ம, ஜெகநாதன் அவர்களும் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக்கொடியை கிளி / மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் திரு. சொலமன் சூ, சிறில் அவர்களினால் ஏற்றிவைக்கப்பட்டது. கூட்டுறவுக் கொடியை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. கந்தசாமி அவர்களும் ஏற்றிவைத்தார். அகவணக்கத்துடன் அரங்க நிகழ்வு ஆரம்பமானது.

வரவேற்புரையை கல்லூரி மாணவி செல்வி மேரிமாலா நிகழ்த்த சிறப்புரைகளை செல்வி வினோதினி மாணவி, திரு, சந்திரக்குமார் மாணவன், திரு. ம. ஜெகநாதன் அள. மல். தலைவர். திரு. பத்மநாதன் கூட்டுறவுப் பரிசோதகர். திரு. க, செல்வராசா பொதுமுகாமையாளர் திரு சிவகுமார் அதிபர் கூட்டுறவுக் கல்லூரி, திரு, சொலமன் சூ சிறில் ஒன்றியத் தலைவர். திரு கந்தசாமி உதவி ஆணையாளர் ஆகியோர் நிகழ்த்தினர். இறுதியில் மாணவர்களின் கலை நிகழ்ச்சியும், கவிதை மன்றமும் இடம்பெற்றது.

## கிளி ப. தெ. வ, கூ. சங்கம் பயிற்சிநெறி

கிளிநொச்சி பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கிளிமாவட்ட கூட்டுறவு சபை ஒன்றிணைந்து கி / மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் அலுவலக பணியாளர்களின் பயிற்சி நெறி ஒன்றை நடாத்தினர்.

மேற்படி சங்கத்தின் தலைவர் த. சிவயோகராசா தலைமையில் இப் பயிற்சி நெறி நடைபெற்றது.

கிளி கூட்டுறவுத்திணைக்கள பரி, சோதகர்கள், திரு பத்மானந்தன் திரு சபாரத்தினம், பேரினைய பொது முகாமையாளர் கி. சிவனேசன் ஆகியோர் பயிற்சி வழங்கினர் இப்பயிற்சியில் கிளி. ப. தெ. வ. கூ, சங்கப்பணியாளர் பங்கு பற்றினர் இறுதியில் மேற்படி சங்க பொதுமுகாமையாளர் மு. சண்முகரத்தினம் நன்றியுரை வழங்கினார்.

இந்த மாத

# செய்திகளின் சங்கமம்

செய்நியாக்கம் " கலி "

## கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கப் சிறந்த சேவை

நடப்பாண்டில் (2001) கிளி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் சுமார் 36000 கோழிக்குஞ்சுகளைக் கொண்டு வந்து விநியோகம் செய்துள்ளது அதேவேளை கடந்த மாதங்களில் நல்லின கால் நடைகள் 19 கொண்டு வரப்பட்டு அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது இதில் 18 பசுக்களும் 1 காளையும் என்பது குறிப்பிடத்தக்கது.

அதே போன்று நெய் பிரிக்கும் இயந்திரம், பால் அளக்கும் கருவி, யோக்கட்கப் பால் தாங்கி என்பனவும் கொண்டுவந்து விநியோகிக்கப்பட்டுள்ளதாக மேற்படி சங்கப்பொது முகாமையாளர் வே. குணசிங்கம் தெரிவுத்தார்.

கால் நடைத்திணைக்களக் குஞ்சுகள், பிறிமாக்குஞ்சுகள் என்பது குறிப்பிடத்தக்கது எனவும் தீவன வகைகள், கால் நடை மருந்துவகைகள் என்பனவும் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் கொண்டு வந்து விநியோகிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## மாபெரும் மருத்துவக் கண்காட்சி

கிளிநொச்சி மாவட்ட சித்த ஆயுர் வேத வைத்திய சேவைகள் இணையம் நடாத்தும் மாபெரும் மருத்துவக் கண்காட்சி 2002 ஜனவரி மாத இறுதிப்பகுதியில் முழங்காவிலில் நடைபெறவுள்ளது என மேற்படி இணையச் செயலாளர் வைத்திய காலநிதி க, தங்கத்தாமரைச்செல்வன் தெரிவித்துள்ளார்.

## பேரினையம் பேருதவி

வடமாகாண பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரினையத்தின் பணியாளர் நலத்திட்டம் ஊடாக 5 - ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளில் அதி உச்ச புள்ளிகளைப் பெற்ற பணியாளர்களின் பிள்ளைகள் 5 பேருக்கு புலமைப்பரிசில் ஊக்குகை கொடையாக ரூபா ஐயாயிரம் வழங்க பேரினையம் ஏற்பாடு செய்துள்ளது 2001 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவருக்கே 2002ல் விரைவில் வழங்கப்படவிருப்பதாகவும், அத்துடன் சிறப்பு சான்றிதழ்களும் வழங்கப்படும் என பொது முகாமையாளர் கி சிவனேசன் தெரிவித்தார்,

## கூட்டுறவுப்பயிற்சிநெறி உயர் தரம் தொடக்கம்

கிளிமாவட்ட கூட்டுறவுக்கல்லூரி கூட்டுறவு பயிற்சிநெறி உயர்தர வகுப்பை (2002 ஜனவரி — செப்டம்பர்) ஜனவரி 15 ஆம் திகதி தொடங்கவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களிடமிருந்தும், வெளிவாரி மாணவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என கிளிமாவட்ட கூட்டுறவு சபைச் செயலாளர் க. சிவகுமார் தெரிவித்துள்ளார்.

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுச்சபைக்கூட்டம் அதன் தலைவர் பெ. தில்லைநாதன் தலைமையில் எதிர்வரும் ஜனவரி மாத நடுப்பகுதியில் நடைபெறவிருக்கிறது

2002 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டம், வரவு செலவுத் திட்டம், என்பன சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படவிருக்கின்றன.

2002 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டத்தில் முன்னோக்கிய நெல்கொள்வனவுத்திட்டம், கோழிப் பண்ணை அமைத்தல் அரிசி ஆலை புனரமைப்பு, மினி பஸ் சேவை போன்றவை செயற்படுத்தப்படவிருப்பதாக சங்கவட்டாரங்கள் தெரிவித்தன

## சமூகமேம்பாட்டு கருத்தரங்கு

முல்லை தெற்கு பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் சமூக மேம்பாடு தொடர்பான கருத்தரங்கொன்றை அண்மையில் நடாத்தியது.

மேற்படி கருத்தரங்கு அதன் தலைவர் வ ஜீவரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது பேரினையத் தலைவர் க நற்குணம் சிறப்புரையாற்ற விரிவுரைகள் இடம் பெற்றன,

முல்லை இணைய பொதுமுகாமையாளர் சி, வேதவனம் அவர்களும் பேரினைய் பொது முகாமையாளர் கி, சிவனேசன் அவர்களும் விரிவுரை நிகழ்த்தினர்.

## சிறுவர் தினம்

வடக்கு - கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரனையுடன் பூநகரி பிரதேச செயலகம் நடாத்திய சர்வதேச சிறுவர் தினம், முதியோர்தினம், என்பன அண்மையில் பூநகரி பிரதேச செயலர் க. வைரமுத்து தலைமையில் மேற்படி பணிமனையில் இடம் பெற்றது. இந்நிகழ்வையொட்டி பாடசாலை மாணவர் மத்தியில் நடாத்திய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்

## 50,000 கிலோ வெல்ல உற்பத்தி

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இயங்கும் பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் 2002 ஆம் ஆண்டில் 50,000 கிலோ பனம் வெல்லத்தை உற்பத்தி செய்யப்படவிருப்பதாக பேரினைய பொதுமுகாமையாளர் கி. சிவனேசன் தெரிவித்தார்.

## பூநகரி முழங்காவில் சுற்றயல் கூறு வைத்தியசாலை மகப்பேற்று விடுதி திறப்பு

பூநகரி முழங்காவில் சுற்றயல் கூறு வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பெற்ற மகப்பேற்று விடுதியை மாகாண பிரதி சுகாதார சேவைப் பணிப்பாளர்வைத்திய கலாநிதி அ சிவமோகன் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வு மேற்படி வைத்திய சாலை பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி ஜீ ஜீ நர்மேந்திரா அவர்கள் தலைமையில் நடைபெற்றது

திறப்புவிழாவிற்கு வருகை தந்திருந்த விருந்தினர்கள் மங்கல விளக்கேற்றி வைக்க தேசியக்கொடியினை தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் வைத்திய கலாநிதி சூரியகுமாரன் ஏற்றி வைத்தார்.

விடுதியின் பெயர்ப் பலகையின் திரை நீக்கத்தை வன்னிப் பிராந்திய யுனிசெப் நிக்ழ்ச்சித்திட்ட இணைப்பாளர் திருமதி பென்னிஃபுறான் செய்து வைத்தார்.

பூநகரி - முழங்காவில் சுற்றயல் கூறு வைத்தியசாலை அபிவிருத்தி சபையின் முன் முயற்சியுடன் யுனிசெப்நிறுவன நிதியுதவியுடன் இருபது இலட்சரூபா செலவில் நவீன வசதிகளுடன் இவ் மகப்பேற்று விடுதி அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## மொத்த களஞ்சியப் திறப்பு

திருவையாறு படித்த வாலிபர் விவசாயத்திட்ட கூட்டுறவுச் சங்கம் தனது மொத்தக் களஞ்சியத்தை யாழ் முதன்மைச்சாலை கிளிநொச்சியில் திறந்து வைத்துள்ளது. (கிளி கூ. ச. ஒன்றியம் அருகில்).

கடந்த 18 ஆம் திகதி மேற்படி சங்கத் தலைவர் இ. பொன்னம்பலம் அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது.

விவசாய உள்ளீடுகள் இக்களஞ்சியத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது அத்துடன் நுகர்ச்சிக் கிளையொன்று திறக்க ஆலோசிக்கப்பட்டு வருவதாக மேற்படி சங்கத்தின் பொது முகாமையாளர் சே. கேதீஸ்வரன் தெரிவித்தார்,

## புதிய நெறியாளர்

கிளி / புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தன் நெறியாளர் குழுவில் வெற்றிடமாக இருந்த ஓர் இடத்திற்கு க வசந்தகுமாரன் அவர்கள் நெறியாளர் சபையினால் ஒருமனதாக ஒத்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## பூநகரி ப.தெ.வ.அ. சங்கம் சிறப்புற நடாத்திய ஒளி விழா

கிறிஸ்துவின் பிறப்பை வாழ்த்தி ஒளி விழாவை பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் தனது தலைமை அலுவலகத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடியது,

டிசம்பர் 19 அன்று மேற்படி சங்கப் பொது முகாமையாளர் க. இராமச்சந்திரன் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

மங்கல விளக்கினை ஏற்றி ஒளியேற்றப்பட்டது,

தேசியக் கொடியினை மன்/பூநகரி பிரதேச தமிழீழ நிர்வாக சேவை நிர்வாக உத்தியோகத்தர் ராதை ஏற்றிவைத்தார்.

வரவேற்புரையினை மேற்படி சங்க கல்வி உத்தியோகத்தர் வ. தனபாலசிங்கம் நிகழ்த்தினார் தென்னிந்திய திருச்சபை குருமுதல்வர் ஞானப்பிரகாசம் அடிகளார் ஆசியுரை வழங்கினார்.

விழாவிற்கு வருகை தந்திருந்த விருந்தினர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

பேரினையத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் சித்தி எய்திய அங்கத்தவர்களின் பிள்ளைகளிற்கு பரிசில்கள் வழங்கப்பட்டன அதனைத் தொடர்ந்து 79வது சர்வதேச கூட்டுறவுதின விழாப்போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டியவர்களுக்கு சான்றிதழ்கள் பரிசில்கள் என்பன வழங்கி அங்கத்தவர் பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

விழாவிற்கு அங்கத்தவர்கள் பணியாளர்கள் மற்றும் பிரதேசத்தின் முக்கிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் பிரமுகர்கள் என பல தரப்பினரும் வருகை தந்து சிறப்பித்தமை முக்கிய அம்சமாகும். இறுதியில் மேற்படி சங்கத்தின் தலைவர் கி. சிவஞானம் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

# கண்ணி வெடி விழிப்புணர்வு

எமது பிரதேசத்தில் நடைபெறுகின்ற இராணுவ நடவடிக்கைகளினால் இலட்சக்கணக்கான மக்கள் தமது வீடு வாசல்களை இழந்து இடம் பெயர்ந்து சொல்லொணாத் துயரத்துடன் வாழ்ந்து வருகின்றனர் இவர்களிற் சிலர் இராணுவத்திடமிருந்து மீட்கப்பட்ட பிரதேசங்களில் திரும்பவும் சென்று வாழ்ந்து வருகிறார்கள் இப்படி செல்பவர்களுக்கு தொடர்ச்சியாக ஆபத்தை வழங்கி வருவதுள் நிலக்கண்ணிவெடியே முதன்மையாக இருக்கின்றது இன்று உலகிலுள்ள 68 நாடுகளில் 11 கோடி நிலக்கண்ணி வெடிகள் நிலத்தில் புதைத்து கிடப்பதாக ஐக்கியநாடுசபையால் கணிப்பிடப்பட்டுள்ளது எனவே இப்பிரதேசத்துக்கு சென்று வருபவர்கள் கண்ணிவெடி சம்பந்தமான பூரண அறிவை கொண்டிருக்காவிட்டால் மனித அங்கங்களை இழப்பதோடு சில சமயங்களில் உயிர் ஆபத்தையும் எதிர்நோக்க வேண்டி ஏற்படும். கண்ணிவெடிகள் பல விளையாட்டு பொருட்கள் போல் இருப்பதனால் சிறுவர்கள் பலர் அதை எடுத்து விளையாடும் போது வெடிப்பதனால் இளமையிலேயே சிறுவர்கள் அங்கங்களை இழந்து ஊனம் அடைவதோடு தம் இன்னுயிரையும் இழக்கின்றனர் சமூகத்தில் மிக வறுமைப்பட்டோர் மத்தியிலிருந்து தான் கண்ணிவெடிகளினால் பாதிக்கப்பட்டோர் நிறைந்திருக்கும் போக்கு காணப்படுகின்றது ஏற்கனவே வறுமையால் வாடிக்கொண்டிருக்கும் குடும்பங்கள் நிதி ரீதியாக கஸ்ரப்பட்டு இருப்பதனால் தங்கள் பிரதேசத்துக்கு முண்டியடித்து செல்கிறார்கள் இதனால் ஆபத்துக்களை தேடிக்கொள்கிறார்கள் நிலக்கண்ணிவெடிகளை அகற்றும்பணி மிகவும் ஆபத்தானதும் செலவு கூடியதுமான ஒரு நடவடிக்கையாகும் எனவே மக்கள் நிலக்கண்ணி அகற்றும் பிரிவினரின் ஆலோசனையையும் அறிவுரையையும் கேட்டுநடப்பது அவசியமாகும் தமிழீழத்தில் இந்த சேவையை வெண்புறா நிறுவனம் பல கிரமங்களுக்கு மத்தியிலும் சிறப்பாக ஆற்றி வருகின்றது இந்நிறுவனத்தினர் மீட்கப்பட்ட பிரதேசங்களுக்கு சென்று ஆய்வுகளை மேற்கொண்டு கண்ணிவெடி உள்ள பிரதேசங்களை இனம் கண்டு அவ்விடங்களில் மண்டை ஓடுகள் பொறிக்கப்பட்ட இலட்சனைகளை பொறித்தும் மஞ்சள் நாடாக்களை கட்டியும் கண்ணிவெடி பிரதேசங்களை இனம்காட்டி மக்களை அழிவிலிருந்து பாதுகாத்து வருகின்றனர் மேலும் விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்தி வருகிறார்கள்.

கண்ணிவெடிகளை பற்றியும் அதனால் ஏற்படும் விளைவுகளை பற்றியும் விளக்கமளித்து சுவரொட்டிகளை ஒட்டி வருகின்றனர் மக்களை கூட்டம் கூட்டமாக அழைத்து கண்ணிவெடி சம்பந்தமான அபாயங்களையும் அதிலிருந்து விடுவிக்கப்படக்கூடிய வழி முறைகளையும் தெளிவுபடுத்தி வருகிறார்கள்.

கண்ணிவெடி தொடர்பாக மக்கள் மத்தியில் மேலும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பின்வரும் செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும்

கண்ணிவெடி விழிப்புணர்வு சம்மந்தமான கருப்பொருளை மையமாகக் கொண்டு நாடகங்களை தயாரிப்பதன் மூலம் விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தலாம் கட்டுரைப் போட்டிகளை நடாத்தி அவற்றில் சிறந்த கட்டுரையை பத்திரிகை வாயிலாகவும் பிரசுரித்து விழிப்புணர்வை ஏற்படுத்தலாம் வானொலி மூலம் விழிப்புணர்வு சம்மந்தமாக புத்திஜீவிகள் மட்டத்தில் கலந்துரையாடுவதன் மூலம் அவற்றை கேட்பவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்

மேலும் இடம் பெயர்ந்த மக்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்கு சென்று கண்ணிவெடியால் ஏற்படும் ஆபத்துக்களையும் அதிலிருந்து மக்கள் எவ்வாறு தங்களை பாதுகாத்துக் கொள்வது பற்றியும் பயிற்ச்சிப் பட்டறைகள் மூலம் செய்து காட்டும் போது மக்கள் இதனை இலகுவாக புரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும்

இன்று வெண்புறா நிறுவனம் செயற்கை கால் கை போன்ற உறுப்புகளை தயாரிப்பதற்கான மூலப் பொருட்களை சிறிலங்கா அரசு திட்டமிட்டு தடை செய்த போதிலும் அது தம்பணியை தளர விடாமல் சிறப்பாக செய்து வருகிறது எமது மக்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம் ஆகும் இப்பணி சிறப்பாக மேலும் நடைபெறுவதற்கு நிதி வசதிபடைத்தோர் நிதிகளை தாராளமாக அள்ளி வளங்குவதன் மூலம் இப்பணி மேலும் மேலும் சிறப்பாக வளரவழி ஏற்படும்

செல்வி மயூரி மகாதேவன்
தரம் 08 A
மு/விசுவமடு ம. வி.

## பெண் தலைமை

பன்னாட்டு பார் அசோசியேசன் (IBA) தலைவராக பிரிட்டனைச் சோந்த திருமதி டயானா கெம்பே தெரிவு செய்யப்பட்டுள்ளார். வழக்கறிஞர்களுக்கான (சட்டவாளர்) உலகளாவிய பெரிய அமைப்பான இதற்கு ஒரு பெண் தலைமைப் பொறுப்பை ஏற்பது இதுவே முதல் முறையாகும்.

# மாணவர் உலா

## சுத்தம் முதலிடத்தில் டென்மார்க்

மிகக் குறைந்த ஊழல் நிலவும் நாடுகளின் வரிசையில் முதலிடத்தை 'டென்மார்க்' பெறுசிறது இதன் மூலம் தன் நேர்மையை உலகுக்கு பறைசாற்றியுள்ளது. இதைத் தொடர்ந்து பின்லாந்து, நியூசிலாந்து, சுவீடன் என்பன ஊழலற்ற தன்மையை வெளிக்காட்டியுள்ளன பட்டியலில் இறுதியில் நிற்பவை நைஜீரியாவாகும்

## இங்கு வானொலி இல்லாதவர் ஏராளம்

அமெரிக்கா, பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா, மொனாகோ, டென்மார்க், பின்லாந்து, தென்கொரியா போன்ற நாடுகளில் ஒருவருக்கு இரு வானொலிகள் என்ற நிலை. ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் வானொலி. இல்லாதவர் தொகை ஏராளம்.

J. ஈஸ்வரன்
பூநகரி ம வி.
ஆண்டு- 11

## அதிசய கார்

காருக்குள் ஏறி இருந்தால் வெளியில் பார்த்து 'ஓடவேண்டுமென்ற அவசியமில்லை உள்ளே இருந்து நாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். காரில் ஏறி பொத்தானை அழுத்திவிட்டால் உரிய இடம்போய் சேரலாம்.

கார் செல்லும் பாதை சம்பவங்கள் எல்லாம் உள்ளே இருக்கும் T.V. யில் தெரியும் இக்கார் அண்மையில் யப்பானில் பாவனைக்கு வந்துள்ளது இவ்வதிசய காரின் விலை எக்கச்சக்கம் என கூறுகின்றனர்

லூசியா மேரி
ஆண்டு 13,
மு. ம. வி,

## புற்றுநோய்க்கு மருந்து

மனித இனத்திற்கு பெரும் ஆபத்தாக இருந்து வரும் புற்று நோயினால் ஆண்டு தோறும் பத்து இலட்சம்பேர் பாதிக்கப்பட்டு வருகின்றார். தொடக்கத்திலே புற்று நோயைக் கண்டு சிகிச்சையளிக்கப் படுவதனால் ஐந்து இலட்சம் பேர் காப்பாற்றப்படுவதாகவும் மிகுதி ஐந்து இலட்சம் பேர் இறக்க நேரிடுவதாகவும் W. O H. கூறுகிறது புற்று நோயைக் குணப்படுத்த இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை மருத்துவ ஆய்வுகள் தொடர்கின்றன தற்போது இந்திய மருத்துவர் ஒருவர் புற்று நோயைக் குணப்படுத்த முடியுமெனக் கூறுகிறார் இந்தியாவின் கோவா மாநிலக் கடற்கரைகளில் ஒரு வகைப் பச்சை சிப்பி காணப்படுகிறது இதிலிருந்து புற்று நோயைக் குணப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம் என்பதை நிரூபிக்கப் போவதாக அடித்துக் கூறுகிறார் இச்சிப்பிகள் புரதச்சத்து நிறைந்துள்ளது எனவும் மனித உணவாக பயன்படுத்த முடியுமெனவும் கூறுகிறார் அந்த மருத்துவர்

க. கிருஸ்ணன்
ஆண்டு 11
மு. ம. வி,

## திரவமரம்

இது வரை இல்லாத முற்றிலும் இயற்கைப் பொருள்களால் ஆன ஒரு பிளாஸ்டிக் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய பொருளை உருவாக்கியுள்ள ஜெ. பிட்சர் மற்றும் எச். நகெல் ஆகியோர் இதற்கு ஆர்போஃபார்ம் (ARBOFORM) என்று பெயர் வைத்திருக்கிறார்கள் இன்று காகித உற்பத்திதுறையில் உலகம் முழுவதும் ஆண்டொன்றுக்கு ஐந்து கோடி மெட்ரிக் தொன், லிக்னின் (Lignin) என்ற கழிவுப் பொருள் கிடைக்கிறது இந்தக் கழிவுப் பொருளுடன் ஒரு வகைச் சணலைக் கலந்து இந்தப் புதிய இளகும் பண்புடைய பொருள் உருவாக்கப்பட்டிருக்கிறது இதை வெவ்வேறு அச்சுகளில் வார்ப்பதன் மூலம் கடிகாரக் கூடு முதல் தொலைக் காட்சிப் பெட்டியின் வெளிபாகம் வரை வெவ்வேறு வகையான பொருட்கள் இனி இந்தவகை மரப்பொருளாலேயே வடிவமைக்கலாம்.

— யுகா
ஆண்டு 9.
மு. ம. வி.

## HAPPLE GHANRA

அமெரிக்கா 11.6 தொன் நிறையுள்ள தொலை நோக்கி ஒன்றை 1990 காலப் பகுதியில் புவிக்கு அப்பால் விண்வெளியில் நிலை நிறுத்தியது இது வானியல் ஆய்வாளரான ஃகப்ளின் பெயரில் ஃகப்ளின் தொலை நோக்கி என்றழைக்கப்படுகிறது. 1999 இல் இதில் ஏற்பட்ட பழுதுகள் சரீ பார்க்கப்பட்டு மீண்டும் திறம்பட செயற்பட்டு வருகிறது

1999 ஜுலை 23இல் அமெரிக்கா எக்ஸ்கதிர் தொலை நோக்கி ஒன்றை வான்வெளியில் செலுத்தியது, இது இந்தியவானவியல் அறிஞர் சந்திரசேகர் பெயரில் சந்திரா என்றழைக்கப் படுகிறது. 45அடி நீளமுள்ள இதன் நிறை 23000 கிலோவாகும் பேரண்டத்தின் தொலை தூர எல்லையை ஆராயக் கூடியது. இது குவாசர்கள் மற்றும் நோவாக்களில் இருந்துவரும் கதிர்களையும் மதிப்பிட்டு வான் வெளியில் நடைபெறும் நிகழ்வுகளை தெரிந்துகொள்ள உதவுகிறது.

— அ. வத்சலா
ஆண்டு 11
பூநகரி ம. வி.

மாசி மாதத்தில் மலர்ந்த விஞ்ஞான மகான்கள் வரிசையில் ஒருவரான ———

## நிகோலஸ் கொப்பனிக்கஸ்

மூத்த பெரும் விஞ்ஞானி தான் நிகொலஸ் கொப்பனிக்கஸ் இவர் 19 மாசி 1473ல் போலந்து நாட்டில் பிறந்தார். ஜேர்மன் சந்ததி வழி வந்தவர். இவரது உண்மையான பெயர் மிகோலாஜ் கொப்பனிக் இவர் கிரேக்கத்தில் வானவியல், கணிதவியல் கற்றார். அத்துடன் சூரியனைச் சுற்றியே பூமியும் ஏனைய கிரகங்களும் வலம் வருகின்றன என்று முதன் முதலில் எடுத்துரைத்தார்.

1543ல் இவர் எழுதிய நூல் பண்டைய சமயக் கோட்பாடுகளுடன் மோதியதால் பல எதிர்ப்புகளை எதிர்கொள்ள வேண்டி இருந்தது கொப்பனிக்கஸ் தந்த அடித்தளம் ஜோகானஸ் கெப்ளர் கலிலியோ, ஐசாக் நியூட்டன் போன்ற விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளிற்கு உதவியது கொப்னிக்கஸ் 1496 இத்தாயில் பாதுவவையில் மருத்துவம் பயின்றார். 1500ல் உரோமில் கணிதமும் வானவியல் பற்றியும் விரிவுரை நிகழ்த்தினார், பின்னர் ரஷ்யா திரும்பி மாமனாராகிய பிஷப் ஏர்மலுக்கு மருத்துவராக கடமை புரிந்து வந்தார் ஊக்கம் உடையவர்களுக்கு எக்காரியமும் எளிதே அந்த வகையில் இவரும் மருத்துவத்தை எளிதாக ஆற்றிக் கொண்டிருக்கும் வேளை இவர் எழுதிய நூல் வெளிவந்தன, அவற்றின் மூலம் பலர் பெரும் நன்மையடைந்தனர். அந் நூல் வெளிவந்து குறுகிய காலத்தில் அதாவது 1543ம் ஆண்டு வானவியலின் குழந்தையான இவரை விண்ணுலகம் அழைத்துவிட்டது

இப்பெருமகனார் துணிவுடனும் விடாமுயற்சியுடனும் செயல்பட்டதனால் எதிர்காலம் எவ்வளவோ கண்டு பிடிப்புகளைக் காணக் கூடியதாக இருந்துள்ளது.

— கனிமொழி பரமநாதன்

## அறிந்துகொள்ளுங்கள் !

1) மதுவுக்கு அடிமையானவர்கள் கூடுதலாக எந்த விற்றமினை எடுத்தல் வேண்டும்?
விற்றமின் B

2) செயற்கைமழை பெய்விக்கப் பயன்படுத்தும் இரசாயன பொருள் எது?
சில்வர் அயடைற்
இதனை மேகங்களின் மீது தூவுதல்

3) விசர் நாய் கடித்தால் போடப்படும் ஊசி எது?
A R V ஊசி

4) 2-ம் உலகப்போரின் போது கூடுதலாக பயன்படுத்தப் பட்ட விஷ வாயு எது?
அமோனியம் வாயு

5) கண்ணாடியில் உள்ள பிரதான மூலகங்கள் எவை?
சிலிக்கன், பொட்டாசியம்

6) பெயின்ட் எதனால் தயாரிக்கப்படுகிறது?
டைரேனியம்

7) மின் குமிழினுள் செலுத்தப்பட்டுள்ள வாயுக்கள் எவை?
ஆகன், நியோன்

8) இடிமுழக்கம் ஏற்படும் போது உருவாகும் அமிலம் எது?
நைத்திரிக்கமிலம்

9) முதன் முதலில் அணுக் கொள்கையை வெளியிட்ட விஞ்ஞானி யார்?
ஜோன் பால்ற்றன்

10) அணுவின் கூறுகளுள் ஒன்றான இலத்திரனை கண்டறிந்த விஞ்ஞானி யார்?
ஜே. ஜே. தொம்சன்

சங்கமம்
SANGAMAM

ஆறு 6 அருவி 04
டிசெம்பர் 2001

# தடையற்ற பொருளாதார நிலை உறுதிப்படுத்தப்பட வேண்டும்

புதிய பிரதமர், அமைச்சர்கள், அதிகாரிகள் பதவியேற்பு என்பன எல்லோரும் எண்ணியபடி ஈடேறிவிட்டன.

சமாதானத்தை விரும்பி வாக்களித்த மக்கள் மனதில் மட்டற்ற மகிழ்ச்சி. மலைபோல் உயர்ந்திருந்த துன்பம் நீங்கி நீண்ட காலம் காத்திருந்த அமைதி வந்துவிட்டது போன்ற உணர்வு இலங்கை எங்கும் எதிரொலிக்கிறது

இந்த மக்கள் மனதிலிருந்து பொங்கியெழும் மகிழ்ச்சி நின்று நிலைத்து நீடிக்குமா? இவர்களது எதிர்பார்ப்புகள் ஈடேறுமா? பொறுத்திருப்போம் தேர்தல் வாக்குறுதிப்படி பிரதமர் ரணில் சமாதானத்தை ஏற்படுத்துவாரா? அவரது அரசியல் வலிமை தீய சக்திகளை அழித்து நீதியான தீர்வுக்கு வழிவகுக்குமா?

சிங்களப் பேரினவாதிகளின் இனவாதத்தீயில் வெந்து கொண்டிருக்கும் இனப்பிணக்கை தீர்த்து வைக்க முயலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் முன்னெடுப்புக்கள் சந்தேகத்திற்கப்பாற்பட்டவையாக இருக்குமா? என்பதே தமிழ் மக்கள் அங்கலாய்ப்பு

பேரினவாதிகளின் தீய சிந்தனை நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டு செல்கிறது இத் தீயசக்திகளை முறியடித்து சமாதானத்தை உறுதியோடு முன்னெடுப்பதே மக்களின் மனதை வெல்லக்கூடியதாகும்! அதுவே இன்று புதிய அரசுக்குள்ள முதன்மையான கடமையாகும் அதை உணர்ந்து செயற்பட எத்தனிப்பது போல் தெரிகிறது.

அரசால் நீண்ட காலமாக விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத்தடைகளை அகற்றப்போவதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது வரவேற்கக் கூடியதே! பலவருடங்களாக வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் இப்பொருளாதாரத்தடையினால் பல வாழ்வியல் துன்பங்களை அனுபவித்து வந்திருக்கிறார்கள் என்பது வெளிப்படையானதே இதற்கு முடிவுகட்டும் வகையில் வடக்கு - கிழக்கிப் பகுதிக்கு பொருளாதார தடை நீக்கப்படுமானால் அரசு பலவற்றை நிறைவேற்றியாக வேண்டும் இதில் மிக முக்கியமாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவை கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டியவை நிதித் தேவைகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பொருளாதாரத்தடை நீக்கப்பட்டதன் அனுகூலங்களை மக்கள் அனுபவிக்க வேண்டுமானால் கூட்டுறவுச் சங்கங்களின் நிதிதேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் அப்போதுதான் மக்களுக்கு தேவையான நுகர்ச்சிப்பொருட்களை வெளிமாவட்டங்களில் இருந்து எடுத்து வர முடியும் மக்கள் விரும்பியவாறு தங்கள் பொருளாதார தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்பது பிரதமர் ரணில் அவர்களால் புரிந்துகொள்ளக் கூடியதே.

குறிப்பாக வன்னியில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் நிதிநெருக்கடி தீர்த்து வைக்கப்படாவிட்டால் பொருளாதாரத்தடை நீக்கத்தின் பலாபலன்களை மக்கள் நுகர முடியாமல் போய்விடும் என்பது உறுதி.

வன்னிப் பெருநிலப்பரப்பில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பல கோடி ரூபா சொத்துக்களை இழந்துள்ளன இதனால் தமது அத்தியாவசிய சேவைகளை ஆற்றுவதில் பல நெருக்கடிகளை எதிர் நோக்கியுள்ளன.

அரசின் புறக்கணிப்பு, பல்வேறு தடை இராணுவக் கெடுபிடி இவற்றுக்கு மத்தியில் அனுமதிக்கப்படும் நுகர்ச்சி பொருட்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எடுத்து வந்திருக்கின்றன.

யுத்த சூழ்நிலையிலும் அரசின் நிதியுதவி இல்லாத போதும் மக்களின் நுகர்ச்சித் தேவைகளை நிறைவேற்றுவதில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முனைப்புடன் செயலாற்றி வந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும், இனி தொடரப்போகும் பணிகளும் இவர்களுடையதே தற்பொழுது பொருளாதாரத்தடை நீக்கத்தின் பலாபலன்களை வன்னி மக்கள் அனுபவிக்க கூடிய வகையில் நுகர்ச்சிப் பொருட்களை எடுத்துச் செல்ல வசதியாக வன்னி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு மானியம் வழங்க வேண்டும் அல்லது வட்டியில்லா இலகு கடன் வழங்கப்படவேண்டும் என்பது கூட்டுறவுச் சங்கங்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. இதை அரசுமேற்கொள்ள சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு உத்தரவிட நடவடிக்கைஎடுக்கவேண்டும்.

வன்னிவாழ் மக்களின் அருந்தல்களுக்கு மருந்தாக அமைய முடியாத பொருளாதார தடை நீக்கமாக சிறிலங்கா அரசின் நிலைப்பாடு இருப்பது கவலையளிப்பதாகவிருக்கிறது. இரத்தம் சிந்திய மண்ணில் சமாதான சூழலை உருவாக்க தடையற்ற பொருளாதாரநிலை உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## வெல்ல ஊக்குகை கொடுப்பனவு

புதுக்குடியிருப்பு பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தின் வெல்ல உற்பத்தி ஊக்குகை கொடுப்பனவு நிகழ்வொன்றை அண்மையில் அதன் தலைமை அலுவலகத்தில் நடாத்தியது

இந்நிகழ்வு மேற்படி சங்கத்தின் தலைவர் அ. பரமதாஸ் தலைமையில் நடர்த்தியது

வெல்ல உற்பத்தி ஊக்குகைத்திட்டத்திற்கமைய பனந்தொழில் வல்லுனர்களின் பிள்ளைகளுக்கு அவர்களின் வெல்ல உற்பத்திக்கு ஏற்ப ஊக்குகைகொடுப்பனவு பகிர்ந்தளிக்கப்பட்டது.

இந்நிதிபிள்ளைகளின் பெயரில் வங்கியில் வைப்பிலிட்டு அதற்கான சேமிப்பு கையேடு இந் நிகழ்வில் வைத்து வழங்கப் பட்டது. இது அங்கத்தவர்களின் பிள்ளைகள் கல்விக்கு எதிர்காலத்தில்பேருதவியாகவிருக்குமென பலராலும் பாராட்டப்பெற்றது:

## விதை உ. கிழங்கு விநியோகம்

முழங்காவில் விவசயக் கூட்டுறவுச் சங்கம் இவ் ஆண்டு 6060 கிலோ விதை உருளைக் கிழங்கை தனது அங்கத்தவர்களுக்கு வழங்கி உருளைக் கிழங்கு செய்கையை ஊக்குவித்திருப்பதாக மேற்படி சங்கப் பொது முகாமையாளர் செ. வ. மோகநாதன் தெரிவித்தார்

## கூட்டுறவு அமைச்சர்

இலங்கையின் புதிய கூட்டுறவு அமைச்சராக ARM அப்துல்காதர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## புதிய நெறியாளர் குழு தெரிவு

கரைச்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய நெறியாளர்குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் சங்க தலைவர் க. முத்துக்குமார் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது,

புதிய நெறியாளர் குழு தெரிவை கிளிமாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவு ஆணையாளர் த. கந்தசாமி நடாத்தி வைத்தார்.

தலைவராக க. தர்மசூரியரும் உபதலைவராக வை வீரபத்திர பிள்ளையும் தெரிவாகியுள்ளனர், பின் வருவோர் நிர்வாக குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர் க. சிவசுப்பிரமணியம் க, நடராசா தா, சுந்தரலிங்கம் க. சுரேஸ்வரன் அ. விக்கினேஸ்வரன் அனைவரும் ஒருமனதாக தெரிவாகினர்.

## கிளைக்குழு உறுப்பினருடனான சந்திப்பு

கரைச்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க புதிய நெறியாளர் குழு தங்கள் கிளை பொதுச்சபை உறுப்பினர்கள் கிளைக் குழு உறுப்பினர்கள் ஆகியோரை அவ் அவ் கிளைகளில் ஒன்று கூடல் மூலம் சந்தித்து சங்கத்தின் வளர்ச்சி குறித்து கிளைக்குழுக்களின் அதிகாரப்பகிர்வு குறித்தும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவிருப்பதாக மேற்படி சங்கத் தலைவர் ப. தர்மசூரியர் தெரிவித்தார்.

## க.கிழக்கு கூ. ச. ஊழியர் தொழிற் ச. தெரிவு

கரைச்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஊழியர் தொழிற்சங்கம் அமைக்கப்பட்டு புதிய நிர்வாக தெரிவும் இடம்பெற்றுள்ளது.

தலைவராக ஆ சிவகுருவும் உப தலையராக த. கங்காதரன், செயலாளராக நா. முத்துக்கிருஸ்ணன் பொருளாளராக மு கருணாநிதி ஆகியோரும் மேலும் மூவர் உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## இழப்பீடு கிடைக்கவில்லை

கிளி வேலனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான பார ஊர்த்தி வவுனியாவில் தொடரணி சேவையில் ஈடுபட்டுவந்தது இது இராணுவத்தினரால் தங்தள் பாவனைக்கு எடுக்கப்பட்டபோது முற்றாக சேதமடைந்தது இன்றுவரை இதற்கான நட்டஈட்டை இதுவரை அரசு வழங்கவில்லை சுமார் பதினைந்து இலட்சரூபா மதிப்புள்ள இவ்பார ஊர்திக்குரிய இழப்பீடு மூன்று வருடமாகியும் தீர்க்கப்படாமல் இருப்பதால் சங்கம், பெரும் நெருக்கடியை எதிர் நோக்குவதாக சங்கப் பொதுமுகாமையாளர் வே செல்லத்துரை தெரிவித்தார்.

## வவுனியா ப. தெ. பே. உறுப்புரிமை

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள வவுனியா மாநகர பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 25000/- ரூபா பங்குப்பணம் செலுத்தி வடமாகண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவராக இணைந்துள்ளது. இந்த உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டதன் மூலம் பேரினையத்தில் உறுப்புரிமை பெற்றுள்ள சங்கங்கள் அனுபவிக்கின்ற சலுகைகள் அனைத்தும் இவர்களுக்கும் கிடைக்கும். நலமேம்பாட்டுத் திட்டங்களுக்கான உதவிகள்2002 இல் கிடைக்குமென பேரினையம் அறிவித்துள்ளது.

## பயிற்சி கருத்தமர்வு

பூநகரி பனை - தென்னை வள அபிவிருந்திக்கூட்டுறவுச் சங்க கிளைக்குழு உறுப்பினர்களுக்கான விசேட பயிற்சிக் கருத்தமர்வு விரைவில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தமர்வில் பேரினைய பிரதிநிதிகளும் கிளிமாவட்ட இணையப் பிரதிநிதிகளும் பங்குபற்றி ஆலோசனைகளை வழங்குவர் என தெரிய வருகிறது

## கூட்டுறவுச் சங்கமாகப் பதிவு

கிளிநொச்சி மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம் தன்னை கூட்டுறவுக்குள் இணைத்துக் கொள்கிறது.

28-12-2001 அன்று இவர்களது பொதுச் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானப்படி கூட்டுறவுச் சங்கமாக பதிவு செய்யப்படவிருக்கிறது.

இது தொடர்பான கூட்டம் மேற்படி சங்கத் தலைவர் இ. பொன்குமார் தலைமை இடம் பெற்றது இதன்படி சங்கம் பதிவு செய்யப்பட்டபின் பின்வரும் பெயர் கொண்டதாகவிருக்கும் கிளிநொச்சி மாவட்ட வெதுப்பக உற்பத்தி விற்பனையாளர் கூட்டுறவுச் சங்கம் எனவும் இதன் நோக்கம் வெதுப்பக உற்பத்தியில், விற்பனையில் ஈடுபடும் அனைவரையும் உள்வாங்கி செயற்படுத்தலும். உற்பத்தித் தேவைக்குரிய மூலப் பொருட்களை நியாய விலையில் கிடைக்கச் செய்து தரமான வெதுப்பியை மக்களுக்கு கிடைக்கச் செய்வதேயாகும் மேற்படி சங்கத் தலைவர் தெரிவித்தார்.

## விதைநாற்று

முழங்காவில் விவசாயக் கூட்டுறவுச் சங்கம் மரக்கறி விதை நாற்று போட்டு மரக்கறி கன்று வகைகளை விற்பனைசெய்து வருகிறது என மேற்படி சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

## கிராமிய வங்கி செயற்திறன் கருத்தமர்வு

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுத் திணைக்களங்கள் ஒன்றிணைந்து கிளி மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் கிராமிய வங்கி பணியாளர்களுக்கான கருத்தமர்வு டிசம்பர் 12ஆம் திகதி நடைபெற்றது

கிளி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் த. கந்தசாமி தலைமையில் இக் கருத்தமர்வு இடம்பெற்றது. இரு மாவட்டங்களின் கிராமியவங்கி பணியாளர்கள் சங்கங்களின் பொது முகாமையாளர்கள் கணக்காளர்கள் கலந்து கொண்டனர்,

முல்லை மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கந்தசாமி கருத்தமர்வை நெறிப்படுத்தினார்.

## நெறியாளர் கருத்தரங்கு

கரைச்சி வடக்கு மற்றும் கரைச்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நெறியாளர் குழு உறுப்பினர்களுக்கான கருத்தரங்குகள் விரைவில் நடை பெறவிருப்பதாக திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன,

## நிரந்தர நியமனம்

கிளிமாவட்ட கூட்டுறவு திணைக்களத்தில் அமைய அடிப்படையில்கடமையாற்றி வந்த திருமதி வளர்மதி மோகனராசா அவர்களுக்கு வடக்கு கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சினால் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கிளி/மா கூ. ச. ஒன்றியம் சார்பாக இப் பத்திரிகை சர்வசக்தி பதிப்பகத்தில் ஜனவரி 7ம் நாள் அச்சிட்டு வெளியிடப்பட்டது